**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8082895

C

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

1. District மாவட்டம் : நாமக்கல்    PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு, நாமக்கல்    Year: ஆண்டு 2023    FIR No.: மு.த.அ. எண் 3/AC/2023    Date: நாள் 16/03/2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.    Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல் 15.03.2023 மாலை 15.20    Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு    Time from நேரம் முதல் மணிக்கு முன்பு    Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16/03/2023    Time : நேரம் மாலை 17.00 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16/03/2023 Volume-I    Time : நேரம் மாலை 17.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக திடீர் தணிக்கையின்போது கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3.கி.மீ. தென் கிழக்கு,
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நாமக்கல்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி.மு.சுபாஷிணி    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.வ.முருகேசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1988    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர்.    (g) Address : முகவரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91, நாள்: 26/03/2023-ன் மூலம் அனுப்பப்படுகிறது.

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any : —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :-

விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளதை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M. நல்லம்மாள் பதவி காவல் ஆய்வாளர், பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது [illegible] எல்லைக்கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/3/23

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

16/3/23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16/03/2023 மாலை 18-30 மணி

Name பெயர் பெ. சுபாஷினி
Rank நிலை ...................... No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
உணவு கடத்தல் மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2023, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,**

**எதிரிகளின் பட்டியல்:**

1) திரு.சீ.நாகராஜன், (வயது-58) த/பெ. சீரங்கன், செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்), செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம், நாமக்கல்.

2) திரு.R.பாலமுருகன் (வயது-46), த/பெ.ராஜகோபால், போர்மேன், உதவிப் பொறியாளர் அலுவலகம் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்), நகர் தெற்கு நாமக்கல், அயல்பணி வரைவாளர், செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நாமக்கல்.

3) திருமதி.A.மீனாட்சி (வயது-39), த/பெ.அறவாழி, வணிக உதவியாளர், உதவிப் பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், நல்லிபாளையம், நாமக்கல் மாவட்டம்.

4) திருமதி.K.லோகநாயகி (வயது-39), த/பெ.கர்ணன், உதவிப் பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்), உதவிப் பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், காளப்பநாய்க்கன்பட்டி, நாமக்கல் மாவட்டம்.

5) திரு.N.பிச்சைமுத்து (வயது 54), த/பெ.நடராஜன், உதவிப் பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்), உதவிப் பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், காரவள்ளி, நாமக்கல் மாவட்டம்.

6) திரு.K.மீனாட்சிசுந்தரம் (வயது-40), த/பெ.கிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்), உதவி செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், எருமப்பட்டி, நாமக்கல் மாவட்டம்.

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2023, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்-12 இன் விபரம்:-**

- - -

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 15.03.2023-ஆம் தேதி புதன்கிழமை மாலை 15.20 மணி முதல் இரவு 23.30 மணி வரை செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், நாமக்கல் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 16.03.2023-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 17.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2023, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் டவுன், மோகனூர் ரோட்டில், காந்தி நகர், கோ-ஆப்ரேட்டிவ் காலனி தெருவில் இயங்கிவரும் செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்), தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம், நாமக்கல் அலுவலகத்தில் செயற்பொறியாளர் அவர்களும் மற்றும் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மின் நுகர்வோர்களிடம் புதிய மின் இணைப்பு வழங்குதல் மற்றும் மின்பாதை மாற்றி அமைத்தல், உயர் மின் அழுத்த மின் இணைப்பு வழங்குதல் ஆகியவற்றிற்கு நேரடியாகவும் அவர்களுக்கு கீழ் பணிபுரியும் உதவி பொறியாளர்கள் மூலமாகவும், 15.03.2023-ஆம் தேதி கையூட்டாக பணம் பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த இரகசிய தகவலின் அடிப்படையில் நான் இரண்டு அரசு சாட்சிகள் 1) திருமதி.க.வசந்தி, க/பெ.கண்ணன், மண்டல துணை வட்டாட்சியர் எண்-2, வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் மற்றும் 2) திரு.ச.அசோகன், த/பெ.சக்திவேல், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் மற்றும் காவலர்கள் குழுவினருடன் நாமக்கல் டவுன் மோகனூர் ரோட்டில், காந்தி நகர், கோ-ஆப்ரேட்டிவ் காலனி தெருவில் தெற்கு பார்த்து அமைந்துள்ள தனியருக்கு சொந்தமான மூன்று

தளங்களுடன் கூடிய அடுக்குமாடி கட்டிடத்தில் தரைத்தளத்தில் இயங்கிவரும் செயற்பொறியாளர் (இயக்கமும் & பராமரிப்பும்) நாமக்கல் அலுவலகத்திற்கு மாலை சுமார் 15.20 மணிக்கு சென்றேன். அலுவலகத்திற்கு உள்ளே இருந்து அலுவலர்கள் வெளியே செல்லா வண்ணம் காவலர்களை கொண்டு காப்பு பணி நியமித்தேன். பின்னர் நான் முதல் கட்டமாக செயற்பொறியாளர் அலுவலகத்தின் உள்ளே முதலாவதாக கிழக்கு பார்த்தவாறு தனி அறையில் அமர்ந்திருந்த செயற்பொறியாளர் அவர்களிடம் சென்று எனது அடையாள அட்டையை காண்பித்து என்னையும், என்னுடன் வந்த மேற்படி இரண்டு அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டு, அவ்வலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரம் பற்றி அவரிடம் தெரிவித்து அவரை விசாரிக்க, அவர் தனது பெயர் பொறியாளர் S.நாகராஜன் (வயது-58), த/பெ.சீரங்கன் என்றும், தான் இவ்வலுவலகத்தில் கடந்த 27.07.2022-ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அலுவலகத்தில் பணியில் உள்ள அலுவலர்களை பற்றி அவரிடம் விசாரிக்க, அலுவலகத்தில் தன்னுடன் சேர்த்து மொத்தம் 17 அலுவலர்கள் பணிபுரிந்து வருவதாகவும், அதில் நிர்வாகப் பிரிவில் திரு.எ.சந்திரராஜ், உதவி நிர்வாக அலுவலர், திரு.சி.செல்வகுமார், நிர்வாக மேற்பார்வையாளர், நிர்வாக உதவியாளர்கள் திருமதி.ம.கனகவல்லி, திரு.ப.காமராஜ் மற்றும் திரு.ல.பிரபாகரன், இளநிலை உதவியாளர்கள் திருமதி.கி.ராஜலட்சுமி மற்றும் திருமதி.தி.உமாமகேஸ்வரி ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள் என்றும், தொழில்நுட்ப பிரிவில் திரு.ம.குமார், வணிக ஆய்வாளர், திருமதி.வெ.விஜயலட்சுமி தொழில் நுட்ப உதவியாளர், திரு.சி.மாதேஸ்வரன் தொழில்நுட்ப உதவியாளர், திரு.மு.உமையாபதி மதிப்பீட்டு அலுவலர் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள் என்றும், அதில் திருமதி.வெ.விஜயலட்சுமி உடல்நிலை சரியில்லாததால் மருத்துவ விடுப்பிலும், திரு.காமராஜ் அவர்கள் ஒருநாள் தற்செயல் விடுப்பிலும் உள்ளார் என்றும் தெரிவித்தார். மேலும் அவர் அலுவலகத்தின் மாடியில் இயங்கி வரும் வருவாய் பிரிவில் உதவி கணக்கு அலுவலர் திருமதி.மல்லிகா, கணக்கு மேற்பார்வையாளர்கள் திரு.க.கனகராஜ், திரு.ந.தங்கவேல், திருமதி.மு.கண்ணம்மாள், திருமதி.இரா.பாப்பாத்தி மற்றும் பதிவுரு எழுத்தர் திருமதி.இரா.சித்ரா ஆகியோர் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். உதவிக் கணக்கு அலுவலர் திருமதி.மல்லிகா கலந்தாய்வு

கூட்டத்தில் கலந்து கொள்ள நாமக்கல் மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு சென்றுள்ளார் என்றும், மற்ற அலுவலர்கள் பணியில் உள்ளனர் என்றும் தெரிவித்தார். மேலும் அயல்பணியில் இரா.பாலமுருகன், போர்மேன், நகர் தெற்கு, நாமக்கல் அவர்கள் இங்கு வரைவாளர் பணியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், திருமதி.சுதாம்பிகை, வணிக உதவியாளர், உதவி செயற்பொறியாளர், நகர், நாமக்கல் அலுவலகத்தில் இருந்து இங்கு வணிக உதவியாளராக பணிபுரிகிறார் என்றும் தெரிவித்தார். மேலும் செயற்பொறியாளர் தனக்கு கீழ் மொத்தம் 25 உதவிப் பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) பிரிவு அலுவலகங்களும், 7 துணை மின் நிலையங்களும், 7 உதவி செயற்பொறியாளர் (இயக்கமும் மற்றும் பராமரிப்பும்) அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார். மேலும் அப்போது அலுவலகத்தில் தபால் அலுவலாக தனக்கு கீழ் உள்ள பிரிவு அலுவலகங்களில் இருந்து சில அலுவலர்கள் வந்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி அலுவலர்கள் அனைவரையும் அவரவர் இருக்கையில் அமர்ந்து அலுவல் செய்யுமாறு நான் கேட்டுக் கொண்டேன். மேலும் அலுவலகத்திற்கு வந்திருந்த மற்ற அலுவலர்களை கூட்ட அறையில் அமர வைக்கப்பட்டது. பின்னர் நான் செயற்பொறியாளர் அறையில் வைத்து சந்தேகத்தின் பேரில், அரசு சாட்சிகள் உதவியுடன் செயற்பொறியாளர் திரு.சீ.நாகராஜன் அவர்களை சோதனையிட்டதில், அவர் தனது சட்டையின் இடது பக்க மேல் வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த ஒரு மணிபர்சில் இருந்து பணத்தை மடிப்புகளுடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.1,650/- (Rs.500 X 3, Rs.50 x 1, 20 x 2, 10 x 6) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, தனது செலவிற்காக கொண்டு வந்த சொந்த பணம் என்று தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால், மேற்படி தொகை ரூ.1,650/- திரும்ப அவரிடமே ஒப்படைத்தேன். பின்னர், செயற்பொறியாளர் அவர்களின் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு கைப்பற்றக் கூடிய வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் செயற்பொறியாளர் அவர்களிடம் அலுவலகத்தில் அரசு கணக்கில் பணம் ஏதும் வசூலிக்கப்படுகிறதா என்று கேட்டதற்கு, அவர் இவ்வலுவலகத்தில் அரசு கணக்கில் பணம் ஏதும் வசூல் செய்யப்படுவதில்லை

என்றும், ஆன்லைன் வழியாக பிரிவு அலுவலகங்களில் தொகை வசூல் செய்யப்படுகிறது என்றும் தெரிவித்தார். மேலும் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் குறித்து கேட்டபோது, உதவி நிர்வாக அலுவலர் திரு.சந்திரராஜ் அவர்கள் மூலம் எடுத்து வரச் செய்து ஆஜர் செய்தார். அதில் வருகைப்பதிவேடு-2023 பார்வையிட்டதில், அதில் இறுதியாக 2023 மார்ச் மாதத்திய வருகைப்பதிவேடு பக்கத்தில் 15.03.2023-ஆம் தேதி வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் தற்காலிக போக்கு மாற்றம் வருகைப்பதிவேடு-2023 பார்வையிட்டதில், அதில் இறுதியாக 2023 மார்ச் மாதத்திய வருகைப்பதிவேடு பக்கத்தில் 15.03.2023-ஆம் தேதி வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் வருவாய் பிரிவு/நாமக்கல் வருகைப்பதிவேடு-2023 பார்வையிட்டதில், அதில் இறுதியாக 2023 மார்ச் மாதத்திய வருகைப்பதிவேடு பக்கத்தில் 15.03.2023-ஆம் தேதி வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் வருகைப்பதிவேட்டின் சுருக்கம் தொடக்கம் 01.01.2023-ஐ பார்வையிட்டதில், அதில் இறுதியாக 10-ஆம் பக்கத்தில் 15.03.2023-ஆம் தேதியில் மேற்படி அலுவலர்கள் வெ.விஜயலட்சுமி, ப.காமராஜ், மு.உமையாபதி ஆகியோர் விடுப்புகளில் உள்ள பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 2022-2023 DCW Proposal Note Book-ஐ பார்வையிட்டதில், அதில் இறுதியாக 152-ஆம் பக்கத்தில் வரிசை எண்.2097/09.03.2023, மனு எண்.1458/08.03.23 வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வலுவலகத்திற்கு கொடிநாள் நிதி வசூல் இலக்கு ஏதும் வழங்கப்பட்டுள்ளதா என்று நான் கேட்க, செயற்பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில் இருந்த திரு.சி.செல்வகுமார், நிர்வாக மேற்பார்வையாளர் அவர்கள் மூலமாக கொடிநாள் இலக்கு சம்பந்தப்பட்ட பதிவேடுகளை எடுத்து வரச்செய்து ஆஜர் செய்து, அவர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலக செயல்முறை ஆணை எண்.3414/2022/அ2, நாள்: 03.02.2023-ன்படி 2022-ஆம் ஆண்டுக்கான கொடிநாள் வசூல் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டும், செயற்பொறியாளர் (இயக்கமும் & பராமரிப்பும்), நாமக்கல் அலுவலக கடிதம் கு.எண்.செபொ/இ&ப/நா/க.மே/கோ.கொடிநாள்/2023, நாள்: 24.02.2023-ன்படி நாமக்கல் கோட்டத்திற்கு கொடிநாள் வசூல் இலக்கு கூடுதலாக மொத்தம்

ரூ.2,30,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று விபரம் தெரிவித்து, அதற்கான பதிவுகள் கொடிநாள் நிதி பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். அது சம்மந்தமாக கொடிநாள் நிதி பதிவேடு பார்வையிட்டதில், அதில் இறுதியாக 28-29ஆம் பக்கங்களில் கொடிநாள் நிதி வசூல் இலக்கு ரசீதுகள் 1. நகர்/நாமக்கல், 2. எருமப்பட்டி, 3. வலையப்பட்டி, 4. புதன்சந்தை, 5. சேந்தமங்கலம், 6. காளப்பநாயக்கன்பட்டி பிரிவு அலுவலகங்களுக்கு இரசீதுகள் மொத்தம் ரூ.2,30,000/-ற்கு பிரித்து வழங்கப்பட்ட பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி பதிவேடுகள் மற்றும் கோப்புகள் பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் கையொப்பமிடப்பட்டு திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் உதவி நிர்வாக அலுவலர் அறைக்கு செல்லப்பட்டது. அங்கு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.எ.சந்திரராஜ், த/பெ.எட்வர்டு என்றும், தான் 23.07.2018-ஆம் தேதி முதல் உதவி நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். சந்தேகத்தன் பேரில் அவரை சோதனையிட, அவர் தனது பேண்டின் இடது பக்க முன்பாக்கெட்டில் இருந்து ரூ.420/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.420/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் அலுவலர்கள் அமர்ந்து பணிபுரியும் அலுவலர் அறைக்கு செல்லப்பட்டது. அங்கு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.சி.செல்வகுமார், த/பெ.சின்னதுரை என்றும், தான் நிர்வாக மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் தனது சட்டையின் இடது பக்க மேல்வெளிப்பாக்கெட்டில் இருந்து ரூ.530/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.530/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க,

அவர் தனது பெயர் திரு.ம.குமார், த/பெ.மகாலிங்கம் என்றும், தான் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் தனது பேண்டின் வலது பக்க பின்வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்சில் இருந்து ரூ.2,670/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது வீட்டு மளிகை பொருள் வாங்கிச் செல்வதற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.2,670/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.ம.கனகவள்ளி, க/பெ.மகாமுனி என்றும், தான் அ1 இருக்கை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரது ஹேண்ட்பேக்கை சோதனையிட, அதில் இருந்த சிறிய மணிபர்சில் இருந்து ரூ.530/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது பஸ் செலவிற்காகவும், சந்தை செலவிற்காகவும் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.530/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.T.உமாமகேஸ்வரி, க/பெ.சதீஸ்குமார் என்றும், தான் அ3 இருக்கை இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரது கருப்பு கலர் ஹேண்ட்பேக்கை சோதனையிட, அதில் இருந்த விஷ்ணு ஜீவல்லர்ஸ் மணிபர்சில் இருந்து ரூ.240/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது கை செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.240/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.K.ராஜலட்சுமி, க/பெ.செந்தில் என்றும், தான் அ4 இருக்கை இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரது கருப்பு கலர் ஹேண்ட்பேக்கை சோதனையிட, அதில் இருந்து ரூ.1,940/-

ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சுடிதார் தைக்க கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.1,940/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.T.பிரபாகரன், த/பெ.லட்சுமணன் என்றும், தான் அ2 இருக்கை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, அவரது சட்டையின் இடதுபக்க மேல்வெளிப்பாக்கெட்டில் இருந்து ரூ.150/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது கைச்செலவுக்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.150/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.A.சுதாம்பிகை, க/பெ.மோகனசுந்தரம் என்றும், தான் வணிக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த மணிபர்சை சோதனையிட, அதில் இருந்து ரூ.730/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.730/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, தனது பெயர் திரு.R.பாலமுருகன், த/பெ.ராஜகோபால், போர்மேன், நகர் தெற்கு நாமக்கல் அலுவலகம் என்றும், தான் அயல்பணியில் இவ்வலுவலகத்தில் வரைவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் தனது பேண்டின் வலது பக்க பாக்கட்டில் பல மடிப்புகளாக வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் சரிபார்க்க, அதில் மொத்தம் ரூ.23,320/- (Rs.500 x 46, 200 x 1, 50 x 1, 20 x 1, 10 x 5) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்க, தான் தற்பொழுது

வீடு கட்டிக்கொண்டிருக்கிறேன் என்றும், அந்த செலவிற்காக வைத்திருக்கும் பணம் என்றும், முன்னுக்குப் பின் முரணாக தெரிவித்தார். அப்பணம் குறித்து அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாதாதாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி தொகை ரூ.23,000/- (Rs.500 x 46) தொடர் விசாரணைக்காக நான் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். அவர் சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ.320/-ஐ திரும்ப அவரிடமே ஒப்படைத்தேன். பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.சி.மாதேஸ்வரன், த/பெ.சிவப்பிரகாசம் என்றும், தான் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் தனது சட்டையின் இடது பக்க மேல்வெளிப்பாக்கெட்டில் இருந்து ரூ.60/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.60/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் தபால் பிரிவு அறைக்கு செல்லப்பட்டது. அங்கு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.R.சித்ரா, க/பெ.பழனிசாமி என்றும், தான் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த ஹேண்ட்பேக்கை சோதனையிட, அதில் இருந்து ரூ.1,330/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.1,330/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் நான், அரசு சாட்சிகள் மற்றும் செயற்பொறியாளர் அவர்களுடன் செயற்பொறியாளர் அலுவலகத்தின் முதல் தளத்தில் செயல்பட்டு வரும் வருவாய் பிரிவு அறைக்கு சென்றேன். அங்கு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.N.தங்கவேல், த/பெ.நல்லுசாமி என்றும், தான் கணக்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை

சோதனையிட, அவர் தனது சட்டையின் இடது பக்க உள்பாக்கெட்டில் இருந்து ரூ.1,850/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.1,850/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.M.கண்ணம்மாள், க/பெ.முத்துகிருஷ்ணன் என்றும், தான் கணக்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பிரவுன் கலர் ஹேண்ட்பேக்கை சோதனையிட, அதில் இருந்து ரூ.2,300/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனக்கு மாத்திரை வாங்க கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.2,300/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.R.பாப்பாத்தி, க/பெ.கருணாநிதி என்றும், தான் கணக்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த கருப்பு கலர் ஹேண்ட்பேக்கை சோதனையிட, அதில் இருந்து ரூ.6,000/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது வீட்டு வாடகை கொடுக்கவும், மளிகை சாமான்கள் வாங்கவும் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.6,000/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் மற்றொரு இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.K.கனகராஜ் (வயது-60), த/பெ.கந்தசாமி என்றும், தான் கணக்கு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் தனது பேண்டின் வலது பக்க வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்சில் இருந்து ரூ.5,980/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனக்கு மாத்திரை வாங்கவும், சொந்த

செலவிற்காகவும் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.5,980/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அப்போது அலுவலகத்திற்கு உள்ளே வந்த அலுவலரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.C.மல்லிகா, க/பெ.தங்கவேல் என்றும், தான் உதவி கணக்கு அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தற்போது நாமக்கல் கண்காணிப்பு பொறியாளர் அலுவலக ஆய்வுக் கூட்டத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த ஹேண்ட்பேக்கை சோதனையிட, அதில் இருந்து ரூ.1,280/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது சொந்த பணம் என்றும், வீட்டு செலவிற்காக கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.1,280/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர், அவரது இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் ஆவணங்களோ, பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர் நான், அரசு சாட்சிகள் மற்றும் செயற்பொறியாளர் அவர்களுடன் செயற்பொறியாளர் அலுவலகத்தின் அலுவலக அறைக்கு திரும்பி வரப்பட்டது. அங்கு கூட்ட அறையில் அமர வைக்கப்பட்டிருந்த அலுவலர்களை ஒவ்வொருவராக அழைத்து விசாரிக்க, தனது பெயர் திரு.A.ஸ்டாலின், த/பெ.அன்புராஜ் என்றும், தான் செயற்பொறியாளரின் அலுவலக வாகன தற்காலிக ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனையிட அவரிடம் பணம் எதுவும் இல்லை. பின்னர் மற்றொருவரை விசாரிக்க தனது பெயர், செல்வி.S.ராஜஸ்ரீ (வயது-29), த/பெ.சிவகுமார் என்றும், தான் உதவிப்பொறியாளர் (இயக்கமும் & பராமரிப்பும்)-ஆக பேளுக்குறிச்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், மாலை சுமார் 15.45 மணிக்கு அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்து விசாரிக்க அவர் தான் விவசாய மின் இணைப்பு வழங்க கேட்டுக்கொள்ளப்பட்ட நுகர்வோர்களின் 6 அப்ளிகேசன்களை கொண்டு வந்துள்ளதாகவும் செயற்பொறியாளர் மூலமாக நுகர்வோர்களுக்கான அறிவிப்பு பெற வந்துள்ளதாக தெரிவித்தார், மேலும் அவரது கைப்பையில் ரூ.490/-

இருந்தது. அந்த பணம் அவரிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அந்த பணம் ரூ.490/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர் மற்றொருவரை விசாரிக்க தனது பெயர், திரு.A.சாதிக்பாஷா த/பெ.அபுபக்கர் என்றும், தான் உதவிப்பொறியாளர் (இயக்கமும் & பராமரிப்பும்)-ஆக எருமப்பட்டி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தனது அலுவலகத்தில் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்த திரு.தேசிகாமணி என்பவர் பணியின் போது ஏற்பட்ட மின்விபத்தில் இறந்தது சம்பந்தமாக அவரது வாரிசுதாரர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது என்றும், அந்த இழப்பீடு தொகை போதவில்லை என்று திரு.தேசிகாமணி அவர்களின் மனைவி திருமதி.விஜயலட்சுமி மற்றும் வாரிசுகள் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும், அதுகுறித்து வக்காலத்து படிவத்தில் செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் ஆகியோர்களிடம் கையெழுத்து பெறும் பொருட்டு, நானும், எருமப்பட்டி உதவி செயற் பொறியாளர் திரு.மீனாட்சி சுந்தரம் அவர்களும் இன்று நாமக்கல் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு வந்தோம் என்றும் தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் தனது பேண்டின் வலது பக்க வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்சில் இருந்து ரூ.126/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.126/- அவரிடமே திருப்பிக் கொடுத்தேன். பின்னர் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.B.சுஜிதா, க/பெ.சுரேஷ்குமார் என்றும், தான் வருவாய் உதவியாளராக காளப்பநாய்க்கன்பட்டி உதவி செயற்பொறியாளர் (இ & ப) அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், மாலை இவ்வலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்து விசாரிக்க அவர் தனது அலுவலக வேலையாக வந்துள்ளதாக தெரிவித்தார், மேலும் அவரது கைப்பையில் ரூ.170/- இருந்தது. அந்த பணம் அவரிடம் கேட்டபோது தனது பஸ் செலவிற்காக கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அந்த பணம் ரூ.170/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.C.சரண்யா, க/பெ.ரூபேஷ் என்றும், தான் வருவாய் உதவியாளராக நாமக்கல் ஊரகம் மேற்கு உதவிப்பொறியாளர் (இ & ப) அலுவலகத்தில்

பணிபுரிந்து வருவதாகவும், மாலை இவ்வலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்து விசாரிக்க அவர் தனது டிப்ளமோ படிப்பு சான்றிதழை உண்மை தன்மை கண்டறிய அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா என விபரம் தெரிந்து கொள்ள வந்துள்ளதாக தெரிவித்தார், மேலும் அவரது கைப்பையில் ரூ.2,000/- இருந்தது. அந்த பணம் அவரிடம் கேட்டபோது, வீட்டிற்கு மளிகை சாமான் வாங்க கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.2,000/- அவரிடமே திருப்பிக் கொடுத்தேன். பின்னர் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.C.தமிழ்செல்வி, க/பெ.கனகராஜ் என்றும், தான் வருவாய் உதவியாளராக புதன்சந்தை உதவிப்பொறியாளர் (இ&ப) அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், மாலை இவ்வலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்து விசாரிக்க, அவர் தனது டிப்ளமோ படிப்பு சான்றிதழை உண்மை தன்மை கண்டறிய அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா என விபரம் தெரிந்து கொள்ள அ2 உதவியாளர் திரு.பிரபாகரன் அவர்களை பார்க்க வந்துள்ளதாக தெரிவித்தார், மேலும் அவரது கைப்பையில் ரூ.2,000/- இருந்தது. அந்த பணம் அவரிடம் கேட்டபோது, வீட்டிற்கு மளிகை சாமான் வாங்க கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.2,000/- அவரிடமே திருப்பிக் கொடுத்தேன். பின்னர் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.S.கோபி, த/பெ.சாமுவேல் என்றும், தான் உதவி கிடங்கு அலுவலராக நாமக்கல் பரமத்தி ரோட்டில் உள்ள கிடங்கு அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், இன்று மாலை இவ்வலுவலகம் வந்ததாகவும், கிடங்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்காக லாரி அலாட்மெண்ட் செய்ய செயற்பொறியாளர் அவர்களை சந்திக்க வந்துள்ளதாக தெரிவித்தார். அவரை சோதனையிட, அவர் தனது பேண்டின் வலது பக்க பின்பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்சில் இருந்து ரூ.1,450/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அது தனது கைச் செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.1,450/- அவரிடமே திருப்பிக் கொடுத்தேன். பின்னர் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.A.மீனாட்சி த/பெ.அறவாழி என்றும் தான், வணிக உதவியாளராக உதவிப் பொறியாளர் அலுவலகம் (இயக்கமும்

பராமரிப்பும்), நல்லிபாளையம் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், இன்று மாலை இவ்வலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்து விசாரிக்க, அவரது பிரவுன் நிற கைப்பையில் ஒரு அறையில் பணம் கத்தையாக மடித்து வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்க்க அதில் ரூ.46,000/- (Rs.500 x 88, 200 x 5, 100 x 10) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க, அவர் தனது சொந்த பணம் என்றும், சொசைட்டியில் லோன் எடுத்த பணம் என்றும் சொன்னார். அந்த பணம் ரூ.46,000/- குறித்து அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாமலும், சந்தேகிக்கும் வகையில் இருந்ததாலும் அந்தப் பணம் ரூ.46,000/-ஐ தொடர் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவர் கைப்பையின் மற்றொரு அறையில் மடிப்புடன் இருந்த பணத்தை ரூ.620/- எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்த பணம் என்றும், செலவிற்காக வைத்திருக்கிறேன் என்றும் சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.620/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.K.லோகநாயகி, த/பெ.கர்ணன் என்றும், தான் உதவி பொறியாளர் (இயக்கமும், பராமரிப்பும்)-ஆக காளப்பநாய்க்கன்பட்டி பிரிவு அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் காளப்பநாய்க்கன்பட்டி துணை மின்நிலையத்தின் உதவி பொறியாளர் பதவியையும் கூடுதல் பொறுப்பில் கவனித்து வருகிறேன் என்றும், காளப்பநாய்க்கன்பட்டி துணை மின் நிலையத்தில் கம்பியாளராக பணிபுரியும் திரு.K.ஜெயபிரகாஷ் என்பவர் மருத்துவ விடுப்பில் சென்று, பின்னர் முன் அறிவிப்பு இன்றி தொடர் விடுமுறையில் சென்றுவிட்டார் என்றும், அவர் மீண்டும் பணிக்கு வரவில்லை என்றும், ஆகையால் அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க குற்றக் குறிப்பாணை தயார் செய்யும் பொருட்டு இன்று நாமக்கல் செயற்பொறியாளர் அலுவலகத்தில் உதவி நிர்வாக அலுவலரை பார்க்க வந்தேன் என்றும் தெரிவித்தார். மேலும் அவர் தனது கைப்பையின் வலது பக்க அறையில் மடிப்புடன் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.4,000/- (Rs.2000 x 1, 500 x 4) இருந்தது. மேற்படி பணம் குறித்து கேட்க, அவர் தனது

செலவிற்காக வைத்திருக்கும் பணம் என்று முன்னுக்குப் பின் முரணாக தெரிவித்தார். அந்த பணம் ரூ.4,000/- குறித்து அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாமலும், சந்தேகிக்கும் வகையில் இருந்ததாலும் அந்தப் பணம் ரூ.4,000/- தொடர் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரது கைப்பையின் இடது பக்க அறையில் ரூ.710/- இருந்தது. மேற்படி பணம் குறித்து கேட்க, அவர் தனது செலவிற்காக வைத்திருக்கும் பணம் என்று தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத் தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.710/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். மேலும் அவர் வைத்திருந்த கம்பியாளர் திரு.K.ஜெயபிரகாஷ் என்பவரின் கோப்பினை பார்வையிடப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.N.பிச்சைமுத்து, த/பெ.நடராஜன், தான் உதவிப் பொறியாளர் (இயக்கமும், பராமரிப்பும்)-ஆக காரவள்ளி பிரிவு அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், நாமக்கல் நடுக்கோம்பை SS-9 மின்மாற்றி பழுதடைந்ததால் அதை மாற்றுவதற்கான ஒப்புதல் கடிதம் பெற்று அதனை மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் கொடுத்து மின்மாற்றி ஒதுக்கீடு பெறும் பொருட்டும், தனது சம்பளம் மற்றும் வீட்டு வாடகைப்படி ஆகியவை குறித்தும் பார்ப்பதற்கும் இன்று இவ்வலுவலகத்திற்கு வந்தேன் என்றும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட, அவர் தனது பேண்டின் இடது பக்க பாக்கட்டில் வைத்திருந்த பணத்தை இரண்டு மடிப்புகளாக எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்பில் ரூ.7,000/- (Rs.2000 x 3, 500 x 2), மற்றொரு மடிப்பில் ரூ.520/- (Rs.500 x 1, 20 x 1) இருந்தது. மேற்படி தொகைகள் குறித்து அவரிடம் கேட்க, அவர் தனது செலவிற்காக வைத்திருக்கும் பணம் என்று தெரிவித்தார். மேலும் அவர் கடந்த வாரம் ATM-இல் எடுத்த பணம் என்றும் தெரிவித்தார். அந்த பணம் ரூ.7,000/- குறித்து அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாமலும், சந்தேகிக்கும் வகையில் இருந்ததாலும் அந்தப் பணம் ரூ.7,000/- தொடர் விசாரணைக்காக மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். அவர் தனது சொந்த செலவுக்காக வைத்திருந்த பணம் ரூ.520/- அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர் மற்றொருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.K.மீனாட்சிசுந்தரம்,

த/பெ.கிருஷ்ணன், தான் உதவி செயற்பொறியாளர் (இயக்கமும் பராமரிப்பும்)-ஆக எருமப்பட்டி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், எருமப்பட்டி உதவிப்பொறியாளர் அலுவலகத்தில் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்த திரு.தேசிகாமணி என்பவர் பணியின் போது ஏற்பட்ட மின்விபத்தில் இறந்தது சம்பந்தமாக அவரது வாரிசுதாரர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது என்றும், அந்த இழப்பீடு தொகை போதவில்லை என்று திரு.தேசிகாமணி அவர்களின் மனைவி திருமதி.விஜயலட்சுமி மற்றும் வாரிசுகள் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும், அதுகுறித்து வக்காலத்து படிவத்தில் செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் ஆகியோர்களிடம் கையெழுத்து பெறும் பொருட்டு, நானும், எருமப்பட்டி உதவி பொறியாளர் திரு.சாதிக்பாஷா அவர்களும் இன்று நாமக்கல் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு வந்தோம் என்றும் தெரிவித்தார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனையிட, அவர் தனது பேண்டின் வலுது பக்க பாக்கட்டில் வைத்திருந்த மணிபர்சில் இருந்து பணத்தை மடிப்புகளாக எடுத்து ஆஜர் செய்தார். அரசு சாட்சிகள் உதவியுடன் சரிபார்க்க அதில் ரூ.4,900/- (Rs.500 x 9, 100 x 4) இருந்தது. அந்த பணம் ரூ.4,900/- குறித்து அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாதாதாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் மேற்படி தொகை ரூ.4,900/- தொடர் விசாரணைக்காக நான் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் செயற்பொறியாளர் அவர்களிடம் 2023-ஆம் ஆண்டில் விவசாய மின் இணைப்புகள் வழங்கியமைக்கான விபரங்கள் பற்றி கேட்க, அவர் வருவாய் ஆய்வாளர் திரு.குமார் அவர்கள் மூலம் கணினியில் பிரிண்ட் எடுத்து வரப்பட்டு கையொப்பம் செய்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில் கடந்த 01.01.2023-ஆம் தேதி முதல் 15.03.2023-ஆம் தேதி வரை சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலகங்களில் விண்ணப்பம் செய்திருந்த விவசாயிகளுக்கு விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்ட கணினி பதிவுகள் இருந்தது. (தாள்-1 முதல் 5 வரை). மேற்படி கணினி பதிவுகள் பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக நானும், அரசு சாட்சிகளும் கையெப்பமிட்டு அதை தொடர் விசாரணைக்காக நான் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். மேலும் செயற்பொறியாளர் அவர்களிடம் தங்களுக்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கு அயல் பணி உத்தரவுகள் வழங்கியுள்ளீர்களா என்று விசாரிக்க, அவர் தான் நிர்வாக காரணங்களுக்காக ஒரு சில

பணியாளர்களை அயல் பணியில் வேறு இடத்தில் பணியமர்த்தி உத்தரவுகள் பிறப்பித்துள்ளேன் என்று கூறினார். அவ்வாறு உத்திரவு பிறப்பிக்க தங்களுக்கு அதிகாரம் உள்ளதா என்று அவரிடம் கேட்க, அதற்கு அவர் தான் உதவி செயற்பொறியாளர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் உத்தரவு பிறப்பித்துள்ளேன் என்றும், அதற்காக பின்னேற்பு அனுமதி பெற நாமக்கல் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளேன் என்றும் தெரிவித்தார். நான் கேட்டுக்கொண்டதின் பேரில், செயற்பொறியாளர் அவர்கள் உதவி நிர்வாக அலுவலர் உதவியுடன் அயல்பணியாக ஆணை பிறப்பித்த பின்வரும் அலுவலக கோப்புகளை எடுத்து ஆஜர் செய்தார். அக்கோப்புகள் பார்வையிடப்பட்டு அவற்றின் நகல் எடுத்து செயற்பொறியாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று தொடர் விசாரணைக்காக நான் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். அலுவலக அசல் கோப்புகள் செயற்பொறியாளர் அவர்கள் வசம் திரும்ப ஒப்படைத்தேன். மேற்படி கோப்புகளின் விபரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 1. | தலைமை பொறியாளர் / பணியமைப்பு சென்னை அவர்களின் கடிதம் எண் : 044434/269/ஜி43/ஜி431/2021, நாள்: 19.07.2021 இணைப்புடன் (3 தாள்கள்) |
| 2. | செயற்பொறியாளர் அலுவலகம் இ&ப நாமக்கல் அவர்களின் உத்திரவு கு.ஆ.எண்.238/செ.பொ/இ&கா/நா/நிபி/உதவி.1/கோ.தபோமா/2023, நாள்: 01.03.2023. (1 தாள்) |
| 3. | செயற்பொறியாளர் அலுவலகம் இ&ப நாமக்கல் அவர்களின் உத்திரவு கு.ஆ.எண் 6607/981/செ.பொ/இ&கா/நா/நிபி/உதவி.1/கோ.தபோமா/2022-2, நாள்: 07.12.2022. (5 தாள்கள்) |
| 4. | செயற்பொறியாளர் அலுவலகம் இ&ப நாமக்கல் அவர்களின் உத்திரவு கு.ஆ.எண்.954-1/செ.பொ/இ&கா/நா/நிபி/உதவி.1/கோ.தபோமா/2022, நாள்: 30.03.2022. (2 தாள்கள்) |
| 5. | செயற்பொறியாளர் அலுவலகம் இ&ப நாமக்கல் அவர்களின் உத்திரவு கு.ஆ.எண்1048/செ.பொ/இ&கா/நா/நிபி/உதவி.1/கோ.தபோமா/2022, நாள்: 28.12.2022. (7 தாள்கள்) |
| 6. | செயற்பொறியாளர் அலுவலகம் இ&ப நாமக்கல் அவர்களின் உத்திரவு கு.ஆ.எண்6805/997/செ.பொ/இ&கா/நா/நிபி/உதவி.1/கோ.தபோமா/2022-2 நாள்: 12.12.2022. (4 தாள்கள்) |
| 7. | செயற்பொறியாளர் அலுவலகம் இ&ப நாமக்கல் அவர்களின் உத்திரவு கு.ஆ.எண்6397/945/செ.பொ/இ&கா/நா/நிபி/உதவி.1/கோ.தபோமா/2022-2 நாள்: 29.11.2022. (7 தாள்கள்) |

| | |
|---|---|
| 8. | செயற்பொறியாளர் அலுவலகம் இ&ப நாமக்கல் அவர்களின் உத்திரவு க.எண்.6607/981/செ.பொ/இ&கா/நா/நிபி/உதவி.1/கோ.தபோமா/2022-1, நாள்: 07.12.2022. (3 தாள்கள்) |
| 9. | செயற்பொறியாளர் அலுவலகம் இ&ப நாமக்கல் அவர்களின் உத்திரவு கு.ஆ.எண் 036/052/நிபி/உதவி.1/கோ.தபோமா/2022-23, நாள்: 23.01.2023. (2 தாள்கள்) |
| 10. | மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் நாமக்கல் மி.ப.வ /நாமக்கல். கு.ஆ.எண்.009014/840/நிபி2/நிஉ1/கோ.த.போ.மா/2021, நாள்: 13.10.2021. (2 தாள்கள்) |
| 11. | மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் நாமக்கல் மி.ப.வ /நாமக்கல். கு.ஆ.எண்.0085/நிப1/உதவி2/கோ.த.போ.மா/2022-1, நாள்: 04.02.2022. (2 தாள்கள்) |
| 12. | மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் நாமக்கல் மி.ப.வ/நாமக்கல். கு.ஆ.எண்.05759/656/ நிபி2/உ1/கோ.த.போ.மா/2022, நாள்: 05.07.2022. (2 தாள்கள்) |
| 13. | மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் நாமக்கல் மி.ப.வ /நாமக்கல். கு.ஆ.எண்.0905/நிபி1/உதவி2/கோ.த.போ.மா/2022 நாள்: 02.11.2022. (1 தாள்) |
| 14. | மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் நாமக்கல் மி.ப.வ/நாமக்கல். கு.ஆ.எண்.மே.பா.போ/நா/நிபி2/நிஉ1/கோ.த.போ.மா/2023, நாள்: 24.01.2023. (1 தாள்) |
| 15. | உதவி செயற்பொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் நகர்/நாமக்கல் க.ஆ.எண்: உ.செ.பொ/இ&ப/நகர்/நாமக்கல்/கோ-தனி/வ.ஆ/எண்.337/2021, நாள்: 21.12.2021. (1 தாள்) |
| 16. | உதவி செயற்பொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் புதன்சந்தை. க.எண்: உ.செ.பொ/இ&ப/பு.சந்தை/கோ-தனி/எண்.146/20221, நாள்: 12.10.2022 (3 தாள்கள்) |
| 17. | உதவி செயற்பொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் நகர்/நாமக்கல் கு.எண்: உ.செ.பொ/இ&ப/நகர்/நாமக்கல்/கோ.த.போ.மா/எண்.357/2022, நாள் : 13.10.2022. (6 தாள்கள்) |

மேலும் மேற்படி அலுவலர்கள் திரு.பாலமுருகன்-போர்மேன்/அயல்பணி வரைவாளர், திருமதி.A.மீனாட்சி-வணிக உதவியாளர், திருமதி.K.லோகநாயகி-உதவிப் பொறியாளர், திரு.N.பிச்சைமுத்து-உதவிப் பொறியாளர் மற்றும் திரு.K.மீனாட்சி சுந்தரம்-உதவி செயற்பொறியாளர் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அவர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதிபலனாகவோ அவர்களால் விண்ணப்பதாரர்கள் மற்றும் மின்நுகர்வோர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் அலுவலர்கள் விண்ணப்பதாரர்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக அவை முறையற்ற முறையில் அலுவலர்களால் அவர்களிடமிருந்து பிரதிபலனாக பெறப்பட்டிருக்கும் பணமாக இருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், மேலும் அலுவலர்கள் தங்களது உயர் அலுவலரான செயற்பொறியாளருக்கு முறையற்ற முறையில் கொடுப்பதற்காக கொண்டு வந்த பணமாக இருக்கக் கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி ஒப்புதல் பெற்று, மேற்படி எதிரிகள் மீது இன்று 16.03.2023-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 17.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.3/AC/2023, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல், அலுவலர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்பமை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

Dsp 16/3/23.

(மு. சுபாஷிணி)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.